



ஓலை 156| ஓசை 279| ஜனவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## பரலி சு. நெல்லையப்பர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

## பொருள்

பிறர் அழும்படியாகச் செய்து பெற்றுக் கொண்ட செல்வம் எல்லாம், நாம் அழும்படியாக அகன்று போகும். நல்ல வழியில் வந்தவற்றை இழந்தாலும் பின்னர் பயன் தரும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

மொழிவது மறுக்கின் அழிவது கருமம்!

பா வகை: நேரிசைப் பஃறொடை வெண்பா




தண்ணீர் தனைவெறுத்தால் தாங்குமோ வையமிது?
கண்ணீர் புறக்கணிக்கும் கண்களே - புண்ணாகும்;
சுண்ணாம்பை வெற்றிலையும் தூரம் ஒதுக்கினால்
மண்தின்ன பாங்காகும் வண்ணமேது? - எண்ணத்தை
ஏற்காமல் நீக்கினால் என்றும் அறிவிளியே;
பாற்கடலில் தூங்கும் பரந்தாமன் - கூடத்தான்
கற்றும் பெரியோர் கனிந்துரைக்கும் நற்மொழியைப்
பற்றிடாமல் நீக்கிப் பழித்தாலே - முற்றும்
அறமழிக்கும் வாழ்வினிலே ஆல்போல் தழைக்கப்
புறக்கணிக்கும் இவ்வுலகம்; புத்தொளியாய் -வீசிடவே
வண்ணமேழு ஏற்றிருக்கும் வானவில்லாய் ஏற்பீரே
திண்ணிய மூத்தோர்சொல் தீர்வு.




**இலக்கணக் குறிப்பு:**

பஃறொடை வெண்பாவிலும் நேரிசைப் பஃறொடை வெண்பா, இன்னிசைப் பஃறொடை வெண்பா உண்டு. மேலேயுள்ள நேரிசைப் பஃறொடை வெண்பாவில் இரண்டிரண்டு அடிகளுக்குத் தனிச்சீர் வரும். பன்னிரண்டு அடிகள் வரை பற்றி வருவது பஃறொடை வெண்பாவாகும். இரண்டிரண்டு அடிகளுக்கு ஒரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வரும். வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் இணைந்து காய் முன் நேர், நேர் முன் நிரை, நிரை முன் நேர் என்ற வெண்டளைப் பிறழாமல் சீருக்குச் சீர் பெற்று வரும். செப்பலோசை அமைய வரும். ஈற்றடியான பன்னிரண்டாம் அடி மூன்று சீர்கள் மட்டும் வந்து, மூன்றாம் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில், கு, சு, டு, து, பு, று என்னும் உகர ஓசையில் முடியும். சீருக்குச் சீர், குற்றியலுகரம் நோக்க வேண்டும்.

பாவகை : எண்சீர் விருத்தம் காய் + காய் + மா + தேமா

மருதமரம் சூழ்ந்திருக்க மண்ணின் ஈரம்
மனமகிழ்ச்சி நல்கிடவே மாண்பும் மல்க

கருத்துடனே உழவருமே கண்ணாய்ப் பேணக்
கடமையினைச் செய்திட்டே கள்ளம் இன்றி

பருவத்தில் பயிர்செய்தே பசியைப் போக்க
கருமுகிலும் நன்னீரைக் காராய்த் தூவல் .

உருமாறும் செம்மையுடன் உலகில் மக்கள்
அருந்தவம்செய் வோர்க்குதவி அன்பைக் காட்டல்.




கவிஞர் செ. கலைவாணி

# காத்திருக்கப் போகிறேன்

என் மௌனத்தை
உடைத்துக்கொண்டு
வந்த வார்த்தைகள்
குபீரென்று சிதறலாயின
கோபக்கணையின்
முடிச்சுகளோடு.

சிதறிய வார்த்தைகளில்
வன்சொற்களின்
ஆதிக்கம் மேலோங்கி
இருப்பதை
எதிரிலிருக்கும் உன் முகத்தில்
காணக் கூடுகிறது
என்னால்.

நான்
தவிர்த்திருக்கலாம்.
என் மௌனம் உடைய
காரணமாயிருந்த
உன் தகாத வார்த்தைகளை
செவி சாய்த்திடாமல்.

முட்டாளாகிப்
போக வேண்டுமென்பது
என் வரையறைக்குள்
முடுக்கப்பட்டிருப்பதை
அறியாமல்
என் மௌனம் உடைய
முட்டாளாகிப் போனேன்.

இயல்பாய் ஒரு மௌனம்
பொலிவுடன்
என்னில் குடிகொள்ள
இன்னும்
சிறிது காலமாகலாம்.
அதுவரை
காத்திருக்கப்போகிறேன்.

எதிரியின்
வஞ்சக வலையிலும்
சுட்சும வட்டத்திலும்
விழுந்துவிடக் கூடாதெனும்
தீர்மானத்துடன் இருத்தலே
எனக்கு
நன்மையென்று அறிகிறேன்
இப்போது.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# அலகை



பைந்தமிழ்மொழி ஐந்திலக்கணம் கொண்டவழகிய மொழியாமது
பயிற்று விக்கும் இலக்கணமது உயர்தனிச்சிறப்பே!
பொதுவாய் நாமெப்படி யெப்படியோ வினாத்தொடுத்து
பகர்கின்றோம் பற்பலவிடை களைவாயில் வந்தபடி!

வினாக்களைத் தொடுக்கலாம் யார்வேண்டுமானா லும்தொடுத்த
வினாக்கள் அறுவகைப் படுமன்றிவேறு வகையில்லை!
வினாக்கள் அறுவகையில் எவ்வகையில்வின வப்பட்டாலும்
விடையளிப்போர்எண் வகையிலோர்வகையில் விடையளிக்கக் கூடுமன்றி
வேறுவகையில் விடையளிக்க இயலாதென்பதை அறிகநீவிர்!

வினாக்களில் ஒருவகைக்கு ஐயவினாவென்பது பெயராகும்!
வெளிச்சமில்லாவோர் இடத்தில்கிடக்கு மொன்றெதுவென தெளிவாயறிந்திட
வினவுவார் பயத்துடனது பாம்பாவது கயிறாவென
வினவும்வவ்வினா ஐயவினாவென இலக்கணவல்லோர் உரைப்பரே!

சிவமே குன்றாயிருப்பதே பரங்குன்றமென வானதறிந்தோம்;
சதாசிவமவர் பார்வதிக்கு பிரணவமந்திரப் பொருளுரைத்ததைக்
கேட்டுவிட்டமுருகன் தான்செய்தபாவம் போகத்தவமியற் றவதற்கருள
குன்றில்காட்சி தந்தனர்பரங்கி நாதருமாவு டைதாயாரும்!
குன்றத்தில் நிற்கின்றதூணொன் றுவின்றுதிடீரென பரப்பரப்பாக்கியது
நாத்திகராத்திகர் திராவிடர்சனாதன வாதிகளென அனைவரையும்!

தூணைப்பார்த்தோர், படத்தில்பார்த்தோர் எனப்பலதரப்பட் டோர்சனநாயக
துடிப்போடு தத்தம்கருத்தே சரியென வாதிட
துலாக்கோலாம் நீதிமன்றமதைத் தீபத்தூணெனப் பார்க்க
மாற்றுக்கருத்தினர் சலவைக்கல்லென் றுமெல்லைக்கல்லென் றுமுரைத்தனரே!

சனநாயகநாட் டிதிலுரைத்தனர் பெரும்பான்மையோர் தீபத்தூணென;
சாதிக்கின்றனர் சிறுபான்மையோ ரதுதீபத்தூண் இல்லையென்று!
வான்புகழ்கொண்ட வள்ளுவனார் புல்லறிவாளர் தன்மைதனை
வகுத்துத்தொகுத்து உரைத்தனர் புல்லறிவாண்மை அதிகாரந்தன்னில்;
சான்றோருண்டென் பதையில்லையென சாதிக்கும்மாந்தர் மாந்தர்களில்லை
சவமாகிவுயிர் இழந்துவலையும் அலகைகளென்றார் அவர்வழிநின்று;
சாற்றுவேன்தீபத் தூணைத்தீபத் தூணிலையென்போர் அலகைகளென்றே!

குறள் 850.
------------------
உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

மதம் முளைக்காத நாளில்
மனதில் வெறுமை இல்லை.
மதவியல் மெல்ல வளர
வெறுமை வேர் துளிர்த்தது.
மாசு படிந்த மனங்கள்
மாறுபட்ட காட்சிகள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# தேனினும் இனியது காதல்



மான்விழிகளில் மருட்சி
இதயத்தில் மகிழ்ச்சி

பார்வையில் வீழ்ச்சி
எனக்குள் நெகிழ்ச்சி

அனலானது தேகம்
அணைத்திடத் தீரும்

உருகினேன் உனக்காக
மெழுகானது மனது

உயிரின் தீண்டலில்
உனதானேன் நானே

உறவாகிடு சொந்தமே
பிரியாது பந்தமே

தேனினும் இனியது
காதல் என்பேன்

மதுரசக் கிண்ணங்கள்
மங்கையுனது வண்ணங்கள்

தித்திக்கும் அமுதமே
திகட்டவில்லை குமுதமே

நெஞ்சமதில் துடிப்பு
விழிகளில் கனிவு

எந்நாளும் உனது
நிழலாகித் தொடர்வேன்

அன்பான உள்ளமதில்
இல்லையது கள்ளமே

இளமை நாயகியே
இணைந்திடு பாவையே

எழிலான தேவதையே
மயக்கினாய் என்னையே

கிளிப்பேச்சில் கிள்ளையாகி
ஆனந்தித்தேன் ஆரணங்கே

மங்கையின் முகமதைக்
காணுகையில் பரவசமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மிகைபட சொல்லேல்



மிகைபட சொல்லேல்
மின்வித்தைகள் பேசேல்.
அளந்ததன் வடிவில்
அளப்பரிய மதிப்பினூடே.

அடக்கம் பெருமழையாகிட
அன்பே கடலாகணுமே.
அழகியிலின் தவிப்பில்
வாய்மையே வெல்லணுமே.

வாழ்வியல் மகிழ்வில்
வாசம் வீசும்
வாடாமலர்களின் இதழ்களின்
வாழ்வாதார விடியலாய்.

மிதமாக பேசு
மின்னலடிக்கும் வெளிச்சத்தோடு.
மிளிரும் சிம்மத்தின்
மின்வெளியாய் உரையாடு.

அன்போடு அளவளாவிடு
வானககத்தின் விண்மீன்களின்
சொலிப்புடன் வார்த்தைகள் உலாவட்டுமே.

வலிமை உடையதாய்
வல்லினம் மிகுந்ததாய்
வயல்வெளி நெல்மணிகளாய்.
மிகைபடாமலே பகிர்ந்திடேன்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# கைபேசி



வாழத் துணிந்த
காலத்தில் சாவும்
சாகத் துணிந்த காலத்தில்
வாழ்வும் வருவதுதானே
இயற்கையின் இயல்பு.

அடிப்படை
தேவைகளில்
ஒன்று அதிகரித்து
விட்டது உணவு, உடை,
உறையுள் என்ற வரிசையில்
இன்று கைபேசி.

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# நிம்மதி

நேசிப்பவரை ஒதுக்காமல்,
நேரத்தை ஒதுக்குங்கள்.
அதுவே
நேசத்தின் தேசத்தில்
நிம்மதி நிறைப்பது!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தனிமை



எல்லா உறவுகள்
அருகில் இருப்பினும்
அரவணிக்க யாருமில்லை.
தனி காட்டில்
வாழ்வதை காட்டிலும்
அனாதையாக
வாழ்ந்து விடுவதே மேல்.

கவிஞர் மோனிஷா

# இயற்கை அற்புதம்



இறைவன் மனிதனுக்கு
தந்த பேரருள் இயற்கை.

பல வளங்களால் மிளிர
செய்தான் படைப்பாளனே.

மன அமைதிக்கான
உறைவிடம் இதுவே.

துன்பதுக்கும்
அருமருந்தாகிடுமே
இயற்கையே.

கோபத்தில் அழிவையும்
தரும் சக்தி உண்டல்லோ.

நதிகள் பாடல் இசைக்க
தென்றல் காற்று இதமாக வீச.

குயில் இசை கேட்க
கதிரவன் வெளிச்ச
பூ மாலை தூவ.

தனிமையின் இரகசியம் இதுவே.
கற்பனையில்
வரிகள் தந்திடும்
கவிதையும் இதுவே.

இயற்கை அன்னை
எமக்கு தருமே இன்பத்தை.

எழில் கொஞ்சும் அழகை
வர்ணிக்க வார்த்தையில்லையே.

படைப்பளனுக்கே
பல கோடி நன்றிகள் உரித்தாகுமே.

கவிஞர் முர்ஷிதா பேகம், அக்குறணை, கண்டி

நாட்டில் பல வண்ணங்களில்
பல பின்பங்கள்
பல்வேறு உயிர்களின்
எண்ணங்கள் தினம் ஓர்
வண்ணங்கள்.
குருதிச் சுவடுகளாக
பல்வேறு பரிணாமங்கள்
காலத்திற்கு ஒரு சுவடு
கலங்காத பல்லுயிர் புதிர்
எச்சங்களின் உச்சங்களாக
சுதந்திர வடுவு
காலம் காலமாக கலைந்து போகும்
நிறங்களின் சுவடு
புராதன சின்னங்களாக
பல்வேறு நாடுகளில்
பறவைகளின் ஏடு
காலம் காலமாக தூதுவின்
அதிவேகச்சுவடு
சுதந்திர பிம்பத்தின்
வெள்ளைத்தாள் பறவைகளின் உச்சங்கள்
அன்று முதல் இன்று வரை.



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

# இவர்கள் இப்படித்தான்

இவர்கள் இப்படித்தான்
நடப்பார்கள் என்று
நன்றாகவே தெரிந்த பின்பும்
அருகாமையில் அமர்ந்து
மென்மையாகக் கடந்து
செல்கிறேன்.
சொற்ப வாழ்க்கையில்
கசப்புகள் எதற்கு என்று
மட்டுமே.



கவிஞர் சேஹூ மொஹம்மது பௌஸிரா

# சாலையோரக் கனவுகள்



கனவுகளைச் சுமந்திட்டே நாளும் மனிதர்
கடுமையாக உழைக்கின்றார் வெற்றி நோக்கி !
தினந்தோறும் புதியபுதி யஆசை கனவு ;
செய்துமுடித் தபின்னும்ஓர் கனவு மிஞ்சும் !

முனைப்போடு செல்வந்தர் குளிர்ந்த அறையில் ;
முட்டுசந்தில் தெருவோரம் பலரின் கனவு !
இனிமை கனவுசுமந்து தெருவில் உறக்கம் ;
இல்லார்க்கான உணவுக்கு வண்டிக் கடைகள் !

வென்றிட்டார் பலர்வாழ்வு துவக்கம் தெருவில் ;
விதைத்திட்ட கனவெல்லாம் ஓர்நாள் கூடும் !
அன்றுதேநீர் கடைகாரர் இன்று அமைச்சர் ;
அள்ளியே காலம் தந்தால் வள்ளல் ஆவார் !

குன்றாத நம்பிக்கை மனிதர் கனவு ;
கூடிவரும் நாளில் கோடிகளும் குவியும் !
பொன்னென்ற வாழ்வுண்டு யாவ ருக்கும் ;
பொறுத்திடுவாய் திறம் வளர்ப்பாய் நாளை உனதே !

கவிஞர் ஆ.ச.கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# எளிது! எளிது! எளிது!

(அழகியசிங்கரின் என்பா சரம்)

தேனிக்கு தேன் சேகரித்தல் எளிது.
நரிக்கு தேனடை களைதல் எளிது.
மந்திக்குத் தேனடைத்தேன் சுவைத்தல் எளிது.
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது.
□□
பளிங்கருக்கு அயராமல் மலை ஏறுவதும்,
பரிசலோட்டிக்கு சுழலில் பரிசல் வலிப்பதும்,
வேட்டுவனுக்கு ஈட்டி விடுத்தலும். அவரவர்க்கு
அவரவர் வேலை எளிது.
□□
அற்பனுக்கு வணங்கி இருத்தல் எளிதா?
மூடனுக்கு வாய் ஒடுக்கம் எளிதா?
சான்றோருக்கே இவை கைகொள்ளல் எளிது.
அவரவருக்கும் ஒன்று எளிது.
□□
தவத்தோனுக்கு ஒரு மந்திரம் எளிது.
கற்றோனுக்கு புது பாசுரம் எளிது.
பாமரனுக்கு ’ சரி’ என்பது எளிது.
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது.
□□
அண்ணாமலையானுக்கு ஓங்கு தீயாய் நிற்பதும்;
அரிதுயிலோனுக்கு மூவுலகும் காலால் அளப்பதும்
எளிது; எனில் மற்றோருக்கு எளிதாகுமா?
எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது.
□□
இப்போது எளிதென்ற ஒரு செயல்;
முப்போதும் எளிதாய் இருக்கும் என்றே,
எப்போதும் ஒருவர் நினைத்தல் ஆகுமா?
அப்போதைக்கு அப்போது மாறுமது.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# சுதந்திரத்தின் நிறங்கள்

மரங்களின் சுதந்திரம்
பச்சை நிறம்!
அதை காப்பாற்ற
வெயிலோடும் காற்றோடும்
போராடி தன் சறுகுகளை
தியாகம் செய்கிறது!

கடலின் சுதந்திரம்
அடர்ந்த நீலம்!
அது அதை காப்பாற்ற
வானத்தோடுஅலைகளால்
போராடுகிறது!

மேகத்தின் சுதந்திரம்
வெண்மை
அது தன்னை காப்பற்ற
நகர்ந்து கொண்டே
இருக்கின்றது!

மானுட சுதந்திரம்
செம்மை
அது புரட்சிகளையும்
உயர்தத்துவங்களையும்
உதிரத்தால் எழுதியது!



எனினும் உண்மையில்
சுதந்திரம் என்பது நிறம் அற்றது
ஏன் எனில் உணர்வுகளை
நிறத்தால் அடையாளப்படுத்தலும்
ஓர் சிறை பிடிப்புதான்!

சுதந்திரம் என்பது
மழைதுளிப்போல் நிறமற்றது!
சுதந்திரத்தின் நிறம்
இதுவென்று எதையும்
சொல்லிவிட முடியாது!

கவிஞர் கவி. சுகிரத்னம் (இர. தியாகராசன்), சென்னை

# ஆண்கள்

பெண்மை என்னும்
சக்தியின் முன்னே

ஆண்கள் என்றும்
நிழலின் அடையாளமாய்

பத்து மாதம்
என்னும் வார்த்தையில்

ஆண்களின் அர்ப்பணிப்பு
மறக்கப்படும் சோகங்களாய்

குடும்பத்தின் உயிர்
காக்க நாள்தோறும்

நடைபிணங்களாய் ஆண்மையின்
ஊர்வலம் சாலைகளில்

ஆயிரம் துன்பங்கள்
உயிரை உறிஞ்சினாலும்

புன்னகையின் முகமூடியில்
ஆண்கள் அதிசயங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# சொல்லும் மொழியும்

இருளின் மொழியை கருமை என்று
காயப்பட்ட இதயம் சொல்கிறது காதல் என்று.
அருளின் மொழியை அருமை என்று
நேசிக்கப்பட்ட அன்பு சொல்கிறது கடவுள் என்று.
பொருளின் மொழியை
நிலையற்ற வாழ்க்கை சொல்கிறது பொய்மை என்று.
அன்பின் மொழியை
கருணை கொண்ட மனம் சொல்கிறது தாய்மை என்று..
அறிவின் மொழியை வாசித்த
ஆத்மாக்கள் சொல்கிறது கல்வி புனிதம் என்று.
சுடரின் மொழி சொல்கிறது
என்னை சுமந்து எண்ணை சுமந்து நிற்கும்
விளக்கு தியாகி என்று.
கனவின் மொழி சொல்கிறது
நிறைவேறாத எண்ணங்களின்
இயலாமை கண்ணீர் என்று.

தியாகத்தின் மொழி சொல்கிறது
பிறரை நேசித்து பிரபஞ்சத்தில் வாழ்தல் என்று.
பணிவின் மொழி சொல்கிறது
கரையை மீறாது கட்டுப்பட்டு நிற்கும்
நாணல்தான் அடக்கம் என்று.
துணிவின் மொழி சொல்கிறது
முயற்சி கொண்டு நடை போடுதல்
வெற்றியின் தொடக்கம் என்று.



கவிஞர் முனைவர் முனியாண்டி

# மேகங்களாக உறவுகள்



உறவுகள் எத்தனை?
பிரிவுகள் எத்தனை?
தேடிப் போனால்
ஓடிப் போகும்
மேகங்களாக தெரியும்
கூட்டமாய் இருக்கும்
ஆட்டம் போட்டு
கூட்டத்தை சிதைக்கும்

இருண்ட கரிய மேகம்
மழையை வருவிக்கும்
ஆனால்
உறவுகள் கண்ணீரை வரவழைக்கும்

வெண்பஞ்சு உறவுகள்
எதையும் தாங்கிடும்
அகத்தில் நஞ்சில்லை
அகமே சொல்லிடும் முகத்தரிசனம்

உறவென்று விழியில் குத்தி
ஊரையே நாற்றம் காணச் செய்வர்
உள்ளொன்று வைத்து
புறம் பேசுவது வழமை

சேர்ந்திருந்த போது
யாவும் உண்மைதான்
பிரிவு வந்த வேளை
பரிவு இல்லை அங்கே

அழுதபோது
கண்களைவிட
வலித்தது இதயமே
உறவுகள் பெயரளவில் மட்டுமே

மேகங்கள் மழைக்காகவா?
ஒன்று கூடுகின்றன.
சிக்கி தவிக்கிறேன் நானும்
உக்கிப் போவேனோ நானும்
விடையின்றி வாழ்வில் ஜடமாய்

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# பிள்ளைக் கனியமுதே

கருவாகி உருவாகி
நான் கண்ட
முதல் சொர்க்கமே
இல்லத்திலே கொண்டாடும்
இணையில்லாத தெய்வமே

துயர் தீர்க்கும் அருமருந்தே
காற்றாக உலவி
கன்னம் வருடிடுவாய்
ஊற்றாகப் பெருகி
உள்ளத்தை நிறைத்திடுவாய்
ஏற்றத்துடன் நான்வாழ
எரிசக்தி தந்திடுவாய்



குளிர்ந்த நிலவொளி போல
மலர்ந்து மகிழ்விப்பாயே
ஒளிரும் உன் நகையால்
மிளிரும் என் வாழ்க்கையுமே

வெறுமையைப்போக்குகிறாய்
விரலிடுக்கில் வீணை மீட்டுகிறாய்
கன்னக் குழியிலே என்
எண்ணக் குவியல்களைக்
கொணர்கிறாய்

அன்பின் மொழியை
அறிய வைத்தாய்
அகிலத்திலே என்வாழ்வை
அர்த்தமாக்கினாய்

வண்ணத் தமிழ் போல
வனப்புடன் இருக்கும் ஓவியமே
உன்னாலே
உருவாகிறதொரு காவியமே

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# இயற்கை

யாரும் யாருடனும்
வர போவதில்லை,
அவர் அவர்களுக்கென்று
தனிப்பட்ட வாழ்க்கை இருக்கிறதே,

நம்முடன் நிரந்தரமாக இருக்கும்
ஒரே உறவு இயற்கை மட்டுமே
இயற்கையின் மடியில்
நம் வாழ்வையும் பூஞ்சோலை
ஆக்குவோம்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# உன்னால் தொலைகிறேன்



அன்பை அள்ளி
அளவின்றித் தந்தாய்
தென்றலாய்த் தீண்டியவன்
தேளாய்க் கொட்டுகிறாய்

உள்ளத்தை கொள்ளையிட்டு
உயிரோடு கொல்லுகிறாய்
கள்ளமறியா நானும்
கலங்கி நிற்கின்றேன்

பாசத்தோடு நேசமும்
பலனற்று போனதே
வேசமறியாத நானும்
வெந்து துடிக்கின்றேன்

உன்னோடு பேசாது
உரைநடை ஆனேன்
குன்றிய மனதோடு
குதூகலம் இழந்தேனே

நிழலாகத் தொடர்ந்து
நினைவறுத்துப் போனாயே
தழலில் விழுந்த
பூச்சியாய் நானே

என்னை மறந்து
ஏவுகணையை எறிகிறாய்
துன்பத்தில் தள்ளி
துரோகியாய் நடக்கின்றாய்

தனிமையின் வலியோடு
தளர்ந்து கிடக்கின்றேன்
பனித் துளியாய் பரிவு
தரமாட்டாயா

உன்னால் தொலைந்து
உலகையே மறந்தே
வன்முறையில் நீயும்
வதைக்கிறாய் அன்பே

கவிஞர் கிருஷ் அபி, இலங்கை

# வாழ்க்கை

கேள்விகளும் அவற்றிற்கான
தேடல்களுமாய் வாழ்க்கை!
எதைத் தேடுகிறாய்
என்பதில் உள்ளது
நிம்மதி!
செல்வத்தைத் தேடி
போகிறவன் இழப்பான்
சந்தோஷம்!
புகழைத் தேடுபவன்
போதையில் மிதக்கிறான்!
அகம் தேடி அலைபவன்
ஆழ்மனதில் பொங்கும்
அமைதி!
விடையைத் தேடித் தேடி
வாழும் வாழ்க்கையைத்
தொலைக்கிறோம்!
அமாவாசை இருள் மட்டுமில்லை
வாழ்க்கை!
பௌர்ணமி நிலவும் உண்டு!
நம்பிக்கை கொள் உன் வாழ்வில்!
விடியல் நிச்சயம் உண்டு
வளர்பிறையாய்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# உன்னத பெண்சாமி



உனக்கான ஒருத்தி
உன்னோடு வாழுறவ
உன் அகத்திலே பணியாளாய்
உன் பெத்தவளை பார்த்துகிட்டு
உன் புள்ளைகளுக்கு சேவகம் செய்திட்டு
உன்னையே நினைச்சிருந்து
உனக்காக வாழுறவளுக்கு
உன்னால் முடிஞ்சது
உன் அன்பான பாசத்தால்
உனக்கானவங்களுக்கு நீ வாங்கி தருகையில்
உன்னவளுக்காக சின்னதா ஆசையா
உன் கையால் நீ வாங்கிவந்தா
உச்சி முகராமலே சந்தோஷம் தான் பட்டு
உச்சுக்கொட்டி பெருமை படுவா
உட்காராம ஓடி வேலை செய்வா
உத்தரவில்லாமலே அடிமையாய் ஆயிடுவா
உபயமாக நீ அவளை நினைச்சா போதும் ஐயா
உரிமைனு அவ கேட்பதெல்லாம்
உன்னோட விழியசைவு அவளுக்கானதுதான்னு
உனக்கு புரிஞ்சுதோ புரியலையோ
உடனிருக்கும் நேரம் ஒதுக்கிடு அவகூட
உன்னை மட்டும் நம்பி வந்தவ
உயிர் வாழுவதும் உனக்காகத்தானே
உருப்படியா வாழும் நீ
உருப்போட்டு அசைபோடும்
உயிரான உசுருக்காரி
உன்னைவிட்டு போனபின்
உதவிப் போறதில்லை உன்னோட வேதனை
உயிர் வாழும் காலம் மட்டும்
உசிதமாக துணையாக பார்த்துக்கிடு
உழைக்கும் உன் பொன் ஜாதி
உடல் பழுது ஆனதுன்னா
உன்னால் அமைதியாக ஏதும்
உன்னால் அமைதியாக ஏதும்
உதவமுடியாது பொறுமையோடே
உனக்கு ஒன்னுன்னா அவ துடிச்சுபோய்
உனக்காக விரதமிருப்பா
உனக்கு இது புரிஞ்சதுன்னா நீதான்யா
உசுரு கொடுத்து காக்கும் தெய்வம்
உணர்வோடே உதிரத்தோடு
உறவை விட்டு குலசாமிவிட்டு வந்தவளுக்கு
உன்னால் முடியுமென சொல்லிக்கிறேன்

உடனிருத்தும் இல்லா
கணவர்களைக்கொண்டுபோராடும்
உன்னத பெண்சாமிகளுக்கு அர்ப்பணம்

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# தீராத் தீக்கனவு



தூரத்தில் எங்கோ
சருகுகள் புரளும் ஓசை மட்டும்
சன்னமாய்க் கேட்கின்றன!

பாழும் உலகில்
என்னைத் தவிர
அனைத்தும் அதனதன் ஊனத்தை
உடைந்த காயத்தை கடத்த முடிகின்றது!

சிறுபறவையொன்று எழுந்த வேகத்தில்
அனாசயமாகத் தன் சிறகை
விரித்துப் பறக்க முடிகின்றது!
தோன்றும்போது தரையிறங்கி இறைதேடவும்
அதற்கு தடையும் கிடையாது!

காற்று சன்னமாக
மூங்கிலைக் கடந்த நொடியில்
போனவாரம் மரவண்டு துளைத்த
மூங்கிலின் காயங்கள் அத்தனையும்
மருதோன்றி பூசிய மாயமாய் மறைந்து
இன்னிசை பிறக்கின்றது!

எளிதில் கடக்க முடியாத
சிறு சிறு மௌனங்கள் ஒன்றாய்ப் பயணித்து
உடைத்துப் பார்க்கின்றது
எனது ஒட்டு மொத்த வைராக்கியத்தை.

பெரிதாக ஒன்றும் கேட்காத போதும்
என்னிடம் மட்டும் இதுநாள் வரையில்
அந்தக் கடவுளும் இரக்கத்தை
இரவலாய்க் கூட பரிசாய்த் தந்ததில்லை!

தனிமை தின்ற என்னிரவுகள் மட்டுமே
என் இளமையின் முகவரி அறியுமென்பதால்
புதிய திறப்பின் வாசலைத்
அது தேடிச் செல்கின்றது!

அடிக்கடி தொட்டுச் செல்லும்
உன் ஞாபகத் தூறல் மட்டும்
மருதாணி பூசிச் சிவந்த வேளையில்
வெல்ல முடியாத என்னிளமை
நகைத்துச் சிரித்து
தீரா தீக்கனவாய்த் தொடர்கின்றது!

கவிஞர் யாழிசைச் செல்வா, தேனி மாவட்டம்

# கிளி ஜோசியம்

சின்ன கதவு திறந்தது
சிறகொடிந்த கிளி இது..

சின்னஞ்சிறு நடையினிலே
சிறந்த சீட்டு என் அலகினிலே..

சிறு உழைப்பின் வழியிலே
சிறு நெல்மணி உணவிலே.

சின்னதொரு கூண்டிலே
சிற்றின்பம் இல்லையே.

சிறு கூண்டின் உள்ளேயே
சிறகடிக்க முடியலையே.

சிறகிருந்தும் பறந்திடாமல்
சிறைக்குள் வாழ்க்கை முடியுதே..

சிறையில் அடைத்த மனிதருக்கு
சிற்றுண்டி வருது என் உழைப்பிலே.

சீட்டெடுத்து தரும் எனக்கோ
சிறப்பான வாழ்வொன்றுமில்லையே.

சீட்டினுள்ளே உன் தலையெழுத்தா
சிந்தித்து செயல்படு மனிதா.



சீறும் புலியென சீற்றத்துடன்
சீரும் சிறப்புமாய் முன்னேறு.

சிறந்ததொரு வாழ்க்கை வாழ்ந்திட
சிரமம் பார்க்காது உழைத்திடு.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# வெற்றி என்னும் கோட்டை



வாழ்க்கை ஒரு கடல்தான்
அது ஓயாத அலை தான்
வாழும் முறை சிறப்பானால்
வாழ்வும் ஒரு கலைதான்.

கஷ்டங்கள் துக்கங்கள்
ஆயிரம் இருந்தாலும்
எதிர்பார்ப்பு இல்லாது
உழைக்கின்ற மனிதனுக்கு
ஏமாற்றம் என்பது
எந்நாளும் இல்லையே.

இமை மூடும் காலம் வரை
வாழ்வு ஒரு சவால்தான்
கவலை மறந்து உழைக்கும்
மனிதனுக்கு வாழ்வு
என்றும் தென்றல்தான்
சுகமான வாழ்வுதான்தான்.

தடை கல்லை படிக்கல்லாய்
எதிர்கொள்ளும் நெஞ்சமே.
வெற்றி என்னும் கோட்டையை
ஆட்கொள்ளும் நேரமே.

வாய்மையும் நேர்மையும்
அமைந்தட்ட வாழ்வே
சுற்றமும் நட்பு கொள்ளும்
சுகமான வாழ்வு தான்.

நலமான நட்பும்
"நா" நயம் மிக்க வாழ்வும்
நானிலத்தில் உன்னையே
உயர்த்திடும் உண்மையே.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# உறவுகள்

அப்பா என்று அழைத்தால்
மூவித குரல் கேட்க.
அம்மா என்று அழைத்தால்,
மூவித உருவம் ஓடி வரும்.
நமக்கேன் என்று ஆதரவாய் பேச
அத்தை, மாமா இருக்க.
பாதியில் உருவானலும்,
இறுதி வரை உயிராய் இருக்கும்,
காதல் துணை இருக்க.
அறிவுரை கூற அண்ணன் இருக்க.
அரவணைக்க அக்கா இருக்க.
சுட்டித்தனமாக தங்கை இருக்க.
சண்டைகள் போட தம்பி இருக்க.
கடந்த காலத்தை நாம் கனவில் வாழ
கதைகள் பல கூறம்,
தாத்தா, பாட்டி இருக்க.
வாழும் வாழ்க்கை என்றும் சொர்க்கமே.



கவிஞர் ரா. தர்ஷினிப்பிரியா, கோவை

# நம் மௌனத்தின் அழகு



நீ என்னை பேச சொல்லி
நீயே என்னிடம் அதிகம் பேசுவதை
நான் மௌனமாய் ரசிப்பதும்
நான் உன்னை பேச சொல்லி
நானே உன்னிடம் அதிகம் பேசுவதை
நீ மௌனமாய் ரசிப்பதும்
நம் மௌனத்தின் அழகு

கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

உணவின்
முதல் வாய்க்கும்
கடைசி வாய்க்கும்
இடையே
நிரம்பிக் கிடக்கிறது
ஏதோ ஒரு
தொழில்நுட்பம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# நிசப்தம்

ஒலியின்மையை மட்டும் உணர்த்துவதல்ல நிசப்தம்!
வலிகளுக்கு மெ(மே)ன்மையான மருந்து! குவியும்
கேள்விகளுக்கு பதில்கள் பிறந்திடும் மௌனத்தில்!
ஆழ்ந்த உணர்வுகளை, ஆன்மிகத் தேடல்களை
விழிகள் வார்த்தையின்றிப் பேசிடும் தருணங்களில்
மொழியாகும் நிசப்தம்! தனிமையின் தேடலில்
தோழனாகும் நிசப்தம்! கதைகளில் உணர்வுகளைக்
கடத்திட கதாபாத்திரமாய் மாறிடும் நிசப்தம்!
படபடப்பு, பயம், பதற்றம், ஏமாற்றம்
அடைந்த வெற்றியினால் பெருமகிழ்வில் வார்த்தையின்றி
அடக்கமுடியா உணர்வுகளை, வெளிப்படுத்தும் நிசப்தம்!
தன்னெஞ்சே தன்னைக் கேள்விகேட்கும் தருணங்களில்
உண்மைகளின் சாட்சியாய் இருந்திடும் நிசப்தம்!
கண்ணீர்க் கதைகளில் மனதிற்கு மருந்தாகும்!
பெருநிகழ்வுகளுக்கு முன்னர் பேரமைதியில் நிசப்தம்!
இயற்கையின் அமைதியை, மகத்துவத்தை வெளிப்படுத்த
தியானத்தால் கடவுளை உணர்ந்திடும் முயற்சியில்
வியத்தகு முறையில் விடைதரும் நிசப்தம்!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

## மீண்டும் மீண்டுமாய்



வெற்றிக்குப் பின்னான
உழைப்பு
தக்க வைத்துக்கொள்ள

தோல்விக்குப் பின்னான
முயற்சி
இலக்கை அடைய

நேற்றைய
நல்ல நிகழ்வுகள்
மகிழ்ந்து புத்துணர்வு பெற

பதற்ற காலத்திலும்
நிதானம்
புத்தி சரியாய் பணிசெய்ய

மகிழ்ச்சி நேரத்திலும்
ஆர்பாட்டமின்மை
மனமுதிர்ச்சி வெளிப்படுத்த

இழப்பு காலத்திலும்
விருப்பு வெறுப்பற்றநிலை
காரணம் அறிந்து செய்ய

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# வண்ணத்துப்பூச்சி வரிசை

பள்ளி ஆண்டு விழாவில்
ஒன்றுபோல் வண்ண ஆடை
முதல் வரிசையில் அமர்ந்த
அம்மா அப்பாவிடம் பார்வை
இசைக்கும் ஒற்றைப் பாடலுக்கு
இஷ்டப்படி தனித்தனி ஆட்டம்
தலை சொரியும் ஆசிரியைகள்
பொங்கிப் பூரிக்கும் அம்மாக்கள்
கூட்டுப் பருவம் முடிந்ததும்
சிறகை விரித்துப் பறக்கிறது
வரிசைக்குள் அடங்கி விடுமா
வண்ணத்துப் பூச்சிக் கூட்டம்



கவிஞர் ரவிஜி

இன்றைய உலகம் மாணவர்கள் கைகளிலே
நாளைய உலகம் சரித்திரம் படைத்திடவே
படித்திருந்தால் மட்டுமே
மேன்மை அடைய முடியுமே

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு தானே
மாணவ செல்வங்களே உங்களின் கல்விதான்
உங்களை உயர்ந்த நிலைக்கு
அழைத்துச் செல்லுமே!
சாதாரணமாக நாம் என்னும்
அரசு பள்ளிக்கூடத்தில்தான்
அப்துல் கலாம் ஏழை குடும்பத்தில் பிறந்து
படித்து பட்டங்கள் பெற்று பெரிய விஞ்ஞானி ஆகி,
பின்பு ஜனாதிபதி ஆனாரே!

அவரின் விடாமுயற்சியும்
தன்னம்பிக்கையும் தானே!
எந்த கல்வியாக இருந்தாலும்
கருத்தூன்றி படியுங்கள்.

பிரபஞ்சங்கள் நமக்காக நல்ல விஷயங்களை
தந்து கொண்டே இருக்கும்.
சிக்கனமும், சேமிப்பும் மிக மிக அவசியமே!
உங்கள் பெற்றோர்களின் கனவை நனவாக்குங்கள்.
சிந்தையை சிறகடிக்க விடாமல்
குப்பைமேடாக இருக்காமல்,
கோபுர கலசமாக, நிமிர்ந்த நன்னடையும்
நேர்கொண்ட பார்வையும், வாய்மையும் இருந்தால்
இவ்வுலகம் உங்களை இரு கரம் கூப்பி வரவேற்குமே!

பொற் குவியல் என்ற
கல்வி பெட்டகம் உங்கள் கண்முன்னே!
அதன் சாவி உங்கள் கைகளிலே
மாணவ கண்மணிகளே வாழ்க வளர்க!



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

"அடிக்கடி நாணம் வந்து ஆளை மயக்கும்" ஜானகி அம்மாவின் பாடல் ஆட்டோவில் வசந்தை மயக்கிக் கொண்டிருந்தது. திரும்பிப்பார்த்தான். கண்ணனின் ஆட்டோ தொடர்வதைக் கண்டதும் ஒரு கணம் திகைத்துப் போனவன் அந்த காட்டிற்குள் போவதற்கான பாதுகாப்பினரின் கேட்டை அடைந்ததும், ஆட்டோவை நிறுத்தி விட்டு, உள்ளே இருந்த பாதுகாப்பாளரின் மேலதிகாரியிடம் சென்று தன்னுடைய அடையாள அட்டையை காட்டிவிட்டு, "என்னை ஒருவன் பின் தொடர்கிறான். அவனிடம் எந்த அடையாள அட்டையும் கிடையாது" என்று சொல்லி விட்டு ரமணியை ஆட்டோவை ஓட்டும்படி சொல்லி விட்டு, அவன் மட்டும் ஒதுங்கி நின்று கண்ணனின் ஆட்டோ வருகிறதா என்று கண்காணித்தான்.

கண்ணன் வேகமாக வந்து "சார். நான் அடிக்கடி இங்குள்ள காட்டிலாகா அதிகாரிகளுடன் உள்ளே வருபவன் தான் சார். அடையாள அட்டையை எடுத்து வர மறந்து விட்டேன். ஒரு சின்ன வேலை ... உடனடியாக திரும்பி விடுவேன்" என்று பையிலிருந்து பணம் எடுத்தான்.

"மிஸ்டர். லஞ்சம் கொடுக்கிற பழக்கத்தை விடுங்க.. நீங்க போய் முதலில் அடையாள அட்டையை எடுத்துக் கொண்டு வாருங்கள்"

"சார். நம்ம பிரபு சார். அலுவலகத்திலேயிருந்து தான் வருகிறேன் அவரோடு பேசுங்களேன்" என்று அலைபேசியில் பிரபுவை அழைத்தான்.

"மிஸ்டர். நான் யார் கூடவும் பேசத்தயாரில்லை. போய் உங்கள் அடையாள அட்டையை எடுத்து வாருங்கள். இந்த காட்டுக்குள்ளே சும்மா யார் வேண்டுமிண்ணாலும் போக முடியாது. தெரியுமில்ல.."
பாதுகாப்பாளரின் மேலதிகாரி கத்தினார்.

பிரபு எதிர்முனையிலிருந்து" என்ன கண்ணன் என்ன செய்தி?" என்றார்.

"சார். நான் வசந்தை தொடர்ந்து வருகிறேன். இப்போது காட்டிலாகா கேட்டிலே உள்ளே விடமாட்டேங்கிறாங்க. நீங்க சொன்னால்.." அவன் முடிப்பதற்குள் : இந்த மாதிரி இடியாட் தனமா எதையும் செய்யாதே... நீ

அடையாள அட்டையை எடுத்து போயிருக்க மாட்டாய்... சரி... நம்ம கேட் நம்பர் ஏழிலே கதிரவன் இருப்பார். நீ அவரைப்பார்த்துச் சொல்லிவிட்டுக் கிளம்பு" என்றார்.

கண்ணன் வெளியேறுவதைப் பார்த்து பெருமூச்சு விட்டவாறு ரமணியை அழைத்து ஆட்டோவில் ஏறிக்கொண்ட வசந்த் அலைபேசியில் வரை படம் பார்த்து வழி சொல்ல ஆரம்பித்தான். கண்ணன் வேகமாக கேட் நம்பர் ஏழுக்கு வந்து, கதிரவனிடம் சொல்லி விட்டு ஆட்டோ டிரைவரை விரட்டினான்.
எங்கே தேடியும் வசந்த் வந்த ஆட்டோவைக் காணாமல், திரும்ப முனையும் போது, அங்கே வந்த ஜீப்பில் இருந்த அலுவலகரிடம் "சார் இந்த வழியாக ஒரு ஆட்டோ போச்சுதா?" என்று கேட்டான்.

"ஆமாம் தம்பி.. இப்ப தான் ஒரு ஆட்டோ இங்கே கிழக்கு பக்கமாக போச்சுது... யாரோ மொபைல் பார்த்து வழி சொல்லி கிட்டிருந்தாங்க.." என்றார். கண்ணன் ஆட்டோ டிரைவரிடம்" சீக்கிரமா போப்பா.."என்று விரட்டினான்.

கொஞ்ச தூரத்தில் வசந்த் சென்று கொண்டிருந்த ஆட்டோ தெரிய டிரைவரிடம், " கொஞ்சம் இடைவெளி விட்டு நாம் பாலோ பண்ணுறது தெரியாமல் போப்பா" என்றான் கண்ணன் பெருமூச்சு விட்டவாறு. பின்னாலே திரும்பிப் பார்த்த வசந்த், 'கண்ணன் இங்கேயும் வந்துட்டானா?' என்று முணு முணுத்தவாறு "ரமணி. பின்னாலே நம்மள ஒரு ஆட்டோ தொடருது... கொஞ்சம் ஏதாவது புதரிலே ஒளிஞ்சு நிக்க முடியுமா...? பாருங்க..." என்றான் வசந்த்.

முன்னால் போய்க்கொண்டிருந்த ஆட்டோவைக் காணாமல் தவித்த கண்ணன், வசந்திற்கு போன் பண்ணினான்.'இங்கே எங்கேயாவது நின்னா அவன் போன் சப்தம் கேட்காமல் இருக்காது' என்று எண்ணினான் கண்ணன்.

அலைபேசியை எடுத்த வசந்த், ஒரு முறை அசந்து போனான். நல்ல வேளை போன் "சைலண்ட் மோடில்" இருந்ததால், சப்தம் வராததால், கண்ணனின் தந்திரத்தை புரிந்து கொண்டவன்

கவிஞர் இரஜகை நிலவன்

## வசந்தின் சாதனை

அத்தியாயம் - 12

புதினம்

அலைபேசியை அணைத்துப்போட்டு விட்டு கொஞ்ச நேரம் பொறுமையாக காத்திருந்தான். கண்ணன் பொறுமை இழந்து காட்டை விட்டு வெளியேற, வசந்த், வரை படத்தை பார்த்துக் கொண்டே, ரமணிக்கு வழி சொல்ல ஆரம்பித்தான். நரேனும் அவனும் சந்தித்த யானைக் கூட்டங்கள் வந்த இடம் தாண்டியதும், "ரமணி, வலப்பக்கம் போ" என்றான் வசந்த்.

ஆட்டோ வேகமாகப் போய்க்கொண்டிருக்க, திடீரென்று பிரபுவின் போன் வர, முதலில் எடுக்கலாமா என்று யோசித்தான். பின்பு "வந்த வேலையை முதலில் முடிப்போம் " என்று நினைத்தவாறு, "ரமணி.. அந்தப்பக்கம் வேலி தெரிகிறது பார். அதைத் தாண்டித்தான் போக வேண்டும்" என்றான் வசந்த்.

"சார். வழி ஒண்ணும் தெரியலியே" என்றான் ரமணி ஆட்டோ ஓட்டிக்கொண்டே.
"செம்மியா பாரு" என்றான் வசந்த்.

"ஆங்.. அங்கே ஒரு தொண்டு (வழி) கெடக்கு... ஆனா ஆட்டோ போவுமாண்ணு தான் தெரியல" என்றான் ரமணி
"பக்கத்திலே போய் பார். ஆங்... அந்த முனிவரோட கல்லறை தெரியுது" என்றான்.

"சாரி சார். எறங்கி நடந்து தான் போகணும். ஆட்டோ போற அளவுக்கு வழி இல்ல" என்றான் ரமணி
"சரி. சைடில நிப்பாட்டு" என்று இறங்கியதும், நரேனின் போன் வர "எடுத்தான்"

"வசந்த் போய்ச் சேர்ந்துட்டியா?" என்றது எதிர் முனை.
"ஆங்.. கல்லறையை கண்டுபிடிச்சிட்டேன்." என்றான் வச்ந்த்.

"வெரி குட். கமாண். சீக்கிரம் பக்கத்திலே போய் அந்த செடிய புடுங்கிட்டு என்ன கூப்பிடு: என்றான் நரேன்.
"சரி" அலைபேசியை அணைத்து விட்டு நடந்தான் வசந்த்.

**தொடரும்...**

கவிஞர் இரஜகை நிலவன்

### பிறப்பு, கல்வி



பரலி சு.நெல்லையப்பர், தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பரலிக்கோட்டையில் செப்டம்பர் 18, 1889 அன்று சுப்பிரமணிய பிள்ளை, முத்துலட்சுமி அம்மாள் இணையருக்கு மூன்று ஆண் மக்களுள் இரண்டாவது மகனாகப் பிறந்தார். சிறு வயதில் தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தார். நெல்லையப்பர் மெட்ரிக்குலேஷன் வரை பள்ளியில் படித்தார்.

நெல்லையப்பரின் மூத்த சகோதரர் பரலி சு. சண்முகசுந்தரம் பிள்ளை. வ.உ. சிதம்பரனாரோடு சுதேசி இயக்கத்தில் பங்கு பெற்றார். சிதம்பரனாரின் சுதேசி கப்பல் கம்பெனியின் பங்குகளை விற்றுப் பல்லாயிரம் ரூபாயைத் திரட்டிக் கொடுத்தார். சுப்பிரமணிய சிவாவை வ.உ.சிதம்பரனாருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.சுப்பிரமணிய சிவாவால் 'வந்தே மாதரம் பிள்ளை' என அழைக்கப்பட்டார்.

### தனி வாழ்க்கை

சு. நெல்லையப்பர் 1907-ம் ஆண்டில் பள்ளிப் படிப்பை முடித்த சில நாள்களிலேயே தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனார் நடத்திய சுதேசி கப்பல் கம்பெனியில் கணக்கராகப் பணியாற்றத் தொடங்கினார். மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள சூரத் நகரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வ.உ. சிதம்பரனாரை அழைப்பதற்காக தூத்துக்குடிக்கு வந்த சி. சுப்பிரமணிய பாரதியை பரலி சு. நெல்லையப்பர் முதன்முறையாக, வ.உ. சிதம்பரனாரின் வீட்டில் கண்டார். பாரதியின் கவிதைகள் அடங்கிய நான்கு பக்க வெளியீடு ஒன்றையும் இந்தியா இதழையும் படித்த நெல்லையப்பர் சி. சுப்பிரமணிய பாரதிமேல் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

நெல்லையப்பர் திருமணம் செய்துகொள்ளவில்லை, தன்னுடைய இறுதிக் காலத்தில் பூங்கோதை என்னும் பெண்ணைத் தத்தெடுத்து வளர்த்தார்.

## புதுவையிலும் கோவையிலும்



1910-ன் தொடக்கம் முதல் ஜூன், 1911 வரை பாரதியாரின் வீட்டில் தங்கினார். பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'சூரியோதயம்' என்னும் பத்திரிக்கையின் துணையாசிரியராகப் பணியாற்றினார். ஜூன் 1911-ல் கோவை சிறையிலிருந்த வ.உ. சிதம்பரனார் அழைத்ததால் அங்கு சென்றார்.

## இதழியல்

சிதம்பரனார், சுப்ரமண்ய சிவா இருவரின் கைதையும் கண்டித்து நெல்லையப்பர் எழுதிய கட்டுரை பாரதியார் நடத்திய 'இந்தியா' இதழில் வெளிவந்தது.



புதுவையில் இருந்து பாரதியார் வெளியிட்ட 'சூரியோதயம்' இதழிலும்(1910) கர்மயோகி மாத இதழிலும் (1911)நெல்லையப்பர் துணையாசிரியராக இருந்தார்.

சென்னையிலிருந்து கோ. வடிவேலு செட்டியார் வெளியிட்ட லோகோபகாரி இதழில் 1913-1915 மற்றும் 1917-1918 ஆண்டுகளில் துணையாசிரியராக இருந்தார்.

தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலருடன் இணைந்து பாரதியின் பாடல்களையும், புகழையும் பரப்புவதற்காக 'பாரதி' என்ற இதழை நடத்தினார்( 1915-1916).

## இதழியல்


’தேசபக்தன்’ இதழில் திரு.வி.க., வ.வே.சு.ஐயர் ஆகியோர் ஆசிரியர்களாக இருந்தபொழுது நெல்லையப்பர் துணையாசிரியராகவும் பின்னர் ஆசிரியராகவும் பணியாற்றினார் (1917-செப்டெம்பர் 1921).

1922-ல் ’லோகோபகாரி’ இதழை விலைக்கு வாங்கி நடத்தத் தொடங்கி 1941 வரை அதன் ஆசிரியராக இருந்தார். ஐ. மாயாண்டி பாரதி இவ்விதழின் துணையாசிரியராக இருந்தார். மீண்டும் 1943- முதல் 1948 வரை ’லோகோபகாரி’ இதழில் ஆசிரியராக இருந்தார். எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணனை லோகோபகாரி இதழுக்கு ஆசிரியராக்கினார்.

## இலக்கிய வாழ்க்கை

### வ.உ.சி. சரித்திரம்

நெல்லையப்பர் வ.உ. சிதம்பரனாரோடு தூத்துக்குடியில் இருந்தபொழுதே கவிதைகள் இயற்றினார். பாரதியோடு இருந்த பொழுது அவருடைய பாடல்களைப் படித்து கருத்தும், திருத்தமும் கூறும் அளவிற்குக் கவிதை நுட்பங்களை அறிந்திருந்தார். ’தேசபக்தன்’ இதழில் பணியாற்றியபோது பாரதிதாசன், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை எழுதிய பாடல்களில் திருத்தம் செய்து வெளியிட்டு வந்தார்.




பாரதியார், வ.உ.சி ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை நாவலர் சோமசுந்தர பாரதியார், சக்கரைச் செட்டியார் ஆகியோருடன் இணைந்து, முறையே பாரதியார் சரித்திரம் (1928) - வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம் (1944 - சக்தி காரியாலய வெளியீடு) என்னும் பெயரில் நூல்களாக வெளியிட்டார். சிதம்பரம் பிள்ளை சரித்திரம் நூலுக்கு திரு. வி. க முன்னுரை எழுதினார்.

## பாரதி

பாரதியாரால் "தம்பீ!" என அழைக்கப்பட்ட நெல்லையப்பர், செப்டம்பர் 11, 1921-அன்று பாரதியார் இறந்தபோது அவரது உடலை மறுநாள் இடுகாட்டிற்குத் தூக்கிச் சென்றவர்களுள் ஒருவராக இருந்தார்.

## நூல் பட்டியல்

- தமிழர் திருமணம்
- உய்யும் வழி
- பாரதி வாழ்த்து
- பாரதியார் சரித்திரம்
- வ.உ. சிதம்பரம்பிள்ளை சரித்திரம்

## மொழியாக்கங்கள்

- பக்கிம் சந்திர சட்டர்சியின் ராதாராணி
- பக்கிம் சந்திர சட்டர்சியின் சோடி மோதிரம்
- சுவர்ணலதா (டாக்டர் பா.நடராசனுடன் இணைந்து)
- காந்தியடிகளின் சுயராஜ்யம்
- காந்தியடிகளின் சுகவழி
- சிவானந்தர் உபதேசமாலை

## பதிப்பித்தவை

- ஆத்மசிந்தனை, சி. இராஜகோபாலாச்சாரியார்
- மாதர் கடமை, பி.பி.சுப்பையா
- பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள் (1948)
- பூலோகத்தின் சப்த அதிசயங்கள்
- திருவாசகம், மாணிக்கவாசகர்
- நளன் தூது (நைடதம்), அதிவீரராம பாண்டியன்

## மறைவு

பரலி.சு. நெல்லையப்பருக்கு இறுதிக் காலத்தில் பார்வைக்குறைவு ஏற்பட்டது. மார்ச் 28, 1971 அன்று அவர் காலமானார்.

நன்றி
https://tamil.wiki/

## நாளை நமதே

# வேண்டியதைப் பெற.

# வேண்டாததை விடு.

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com